ஸ்டாலின் அலை வீசுவதால்

தமிழ்நாட்டில் திமுக 2.0 ஆட்சி அமையவுள்ளது

அமைச்சர் சிவசங்கர் திட்டவட்டம்

அரியலூர், ஏப். 25: தமிழகத்தில் ஸ்டாலினின் அலை வீசுகிறது. தமிழ்நாட்டில் திமுக 2.0 ஆட்சி அமையவுள்ளது என அமைச்சர் சிவசங்கர் திட்டவட்டமாக கூறியுள்ளார்.

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் தேவனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் அமைச்சர் சிவசங்கர் தனது குடும்பத்துடன் வந்து வாக்கு செலுத்தினார். அப்போது அவர் கூறியதாவது: தமிழகத்தில் ஸ்டாலின் அலை வீசுகிறது. மிகப்பெரிய வெற்றியை திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி பெறவுள்ளது. தமிழ்நாட்டில் திமுக 2.0 ஆட்சி அமையவுள்ளது. தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் பல இடங்களில் சந்தேகத்தை எழுப்புகிறது. இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரின் நடவடிக்கைகள் எல்லா சந்தேகத்துக்கும் மூல காரணமாக விளங்குகிறது.

தமிழ்நாட்டில் எந்த தேவையுமின்றி முக்கிய அதிகாரிகளை மாற்றியுள்ளனர். குறிப்பாக வாக்குப்பதிவுக்கு கடைசி 2 நாட்களில் அதிகாரிகளை மாற்றியது எல்லோரிடமும் ஒரு பயத்தை உண்டாக்கும் நடவடிக்கையாக தோன்றுகிறது. அதிமுக வேட்பாளர்களின் சொந்தமான பல இடங்களில் இருந்து பணம் எடுக்கப்பட்டுள்ளது.

குன்னம் தொகுதியில் அதிமுக மற்றும் ஐஜேகே கட்சியினர் வாக்காளர்களுக்கு டோக்கன் என்ற பெயரில் நோட்டீஸ் கொடுத்து வந்தனர். அதை நம்பி மக்கள் வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்த்தனர். இவர்களின் ஏமாற்று வேலைக்கு யாரும் பலியாக மாட்டார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

பெரம்பலூர் தேர்தலில் ஒரு சுவாரஸ்யம்

வாக்கு சாவடியில் கிடந்த தங்க செயின் உரியவரிடம் ஒப்படைப்பு

தேர்தல் கமிஷனுக்கு குவிந்து வரும் பாராட்டு

எளம்பலூரில் ஓட்டு பதிவின் போது வாக்கு சாவடியில் தவறவிட்ட ஒன்றரை பவுன் தங்க சங்கிலியை, அதன் உரிமையாளர் கௌசிகனிடம், தேர்தல் நடத்தும் அலுவலர் அனிதா முன்னிலையில், விஏஓ பிரபாகர், கிராம உதவியாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் ஒப்படைத்தனர்.

பெரம்பலூர், ஏப். 25: பெரம்பலூர் மாவட்டம் எளம்பலூர் வாக்குச்சாவடியில் கிடந்த ஒன்றரை பவுன் தங்க சங்கிலியை மீட்டு, கோட்டாட்சியர் முன்னிலையில் விஏஓ, கிராம உதவியாளர் உரியவரிடம் ஒப்படைத்ததற்கு பல்வேறு தரப்பில் இருந்து பாராட்டு குவிந்து வருகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் நேற்றுமுன்தினம் அமைதியான முறையில் நடைபெற்றது. இந்த தேர்தலில் வாக்கு பதிவு செய்திட பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட எளம்பலூர் கிராமத்தை சேர்ந்த சிவக்குமார் மகன் கௌசிகன் என்பவர் வாக்கு சாவடிக்கு சென்றுள்ளார். அங்கு வரிசையில் பொறுமையுடன் காத்திருந்து, பின்னர் தனது வாக்காளர் அடையாள அட்டையை காட்டி, விரலில் மை வைத்து தனது வாக்கினை வாக்கு பதிவு எந்திரத்தில் பதிவு செய்துள்ளார். தனது ஜனநாயக கடமையை வெற்றிகரமாக ஆற்றிவிட்ட மகிழ்ச்சியில் வீடு திரும்பி சென்றுள்ளார். அப்போது அவரின் கழுத்தில் அணிந்திருந்த ஒன்றரை பவுன் தங்கச்சங்கலி மாயமானதை கண்டு அவர் அதிர்ச்சி அடைந்துள்ளார். மீண்டும் வாக்கு பதிவு மையத்திற்கு சென்று பல்வேறு இடங்களில் தேடி அலைந்துள்ளார். ஆனால் தங்க சங்கிலி கிடைக்கவில்லை. எங்கும் கிடைக்காததால் அவர் சோகமடைந்துள்ளார்.

இந்நிலையில், எளம்பலூர் வாக்கு பதிவு மையத்தில் பணியில் இருந்த கிராம நிர்வாக அலுவலர் பிரபாகர் மற்றும் கிராம உதவியாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் தங்க சங்கிலியை கண்டு எடுத்து உள்ளனர். தேர்தல் பணியின் காரணமாக, அதனை தாங்களே வைத்திராமல் உடனடியாக தேர்தல் நடத்தும் அலுவலரும், பெரம்பலூர் வருவாய் கோட்டாட்சியருமான அனிதாவிடம் ஒப்படைத்து உள்ளனர்.

அதன் பின்னர் தங்க சங்கிலியை தவற விட்ட கௌசிகன் தேடி அலைந்தது குறித்து கேள்வியுற்று, தங்க சங்கலி பத்திரமாக கண்டெடுத்து கோட்டாட்சியரிடம் ஒப்படைக்கப்பட்டது குறித்து தகவல் சொல்லி உள்ளனர். இதனை தொடர்ந்து தேர்தல் முடிந்தவுடன், கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு தங்க சங்கிலியை தவற விட்ட கௌசிகன் வரவழைக்கப்பட்டுள்ளார். அங்கு, பெரம்பலூர் வருவாய் கோட்டாட்சியர் அனிதா, தங்கச் சங்கிலியை கண்டுபிடித்த கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் ஆகியோரின் கைகளாலேயே கௌசிகனிடம் ஒப்படைக்கச் செய்துள்ளார்.

மேலும் தங்கச் சங்கிலியை கண்டுபிடித்து பொறுப்புணர்வுடன் ஒப்படைத்த விஏஓ, கிராம உதவியாளர் ஆகிய இருவரையும் பாராட்டி வாழ்த்தினார். இந்த நிகழ்வில் வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் பாரதிவளவன் உடனிருந்தார்.

தங்க சங்கிலியை மீட்டு உரியவரிடம் ஒப்படைத்த கோட்டாட்சியர், விஏஓ, கிராம உதவியாளர் ஆகியோருக்கு பல்வேறு தரப்பினரிடமும் இருந்து பாராட்டுகள் குவிந்த வருகிறது.

அரியலூர் மாவட்ட சட்டமன்ற தேர்தல்

வாக்கு பதிவு எந்திரங்கள் ஸ்ட்ராங் ரூமில் வைத்து சீல்

3 அடுக்கு பாதுகாப்பு

அரியலூர் மாவட்ட தேர்தலில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்கு எண்ணும் மையத்திற்கு கொண்டு வரப்பட்டு பாதுகாப்பு வைப்பறையில் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. உள்படம் - பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் ரத்தினசாமி, டிஆர்ஓ மல்லிகா ஆகியோர் ஆய்வு செய்கின்றனர்.

அரியலூர், ஏப். 25: அரியலூர் மாவட்டத்தில் வாக்குப்பதிவான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணும் மையத்திற்கு கொண்டு வரப்பட்டு வேட்பாளர்கள், முகவர்கள் மற்றும் தேர்தல் பொதுப்பார்வையாளர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் ஆகியோர் முன்னிலையில் ஸ்ட்ராங் ரூம் எனப்படும் பாதுகாப்பு அறையில், பூட்டி சீல் வைக்கப்பட்டதோடு, 24 மணிநேர துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் அரியலூர் சட்டமன்ற தொகுதியில் 330 வாக்குச்சாவடிகளிலும், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் 320 வாக்குச்சாவடிகளிலும் என மொத்தம் 650 வாக்குச்சாவடிகளில் நேற்று முன்தினம் நடைபெற்றது. வாக்குப்பதிவிற்கு பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் நேற்று முன்தினம் இரவு முழுவதும் துப்பாக்கி ஏந்திய போலீசார் பாதுகாப்புடன் அரியலூர் மாவட்டம், கீழப்பழுவூர் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்திற்கு கொண்டு வரப்பட்டது.

வாக்கு எண்ணும் மையத்தில் சட்டமன்ற தொகுதிக்கான வாக்கு சாவடி வாரியாக பாதுகாப்பாக வைப்பறைகளில் வைக்கப்பட்டது. அதன் பின்னர் வேட்பாளர்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில், அரியலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொதுப்பார்வையாளர் பிரியங்கா சிங்லா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொதுப்பார்வையாளர் கைலாஷ் வான்கடே, அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் ஆகியோர் தலைமையில் நேற்று ஸ்ட்ராங் ரூம் எனப்படும் வாக்கு பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்ட பாதுகாப்பு அறையானது பூட்டி சீல் வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து வாக்கு எண்ணும் மையங்களில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் ரத்தினசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறை, கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அறை, வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காணிப்பு அறை ஆகியவற்றை அவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் துணை இராணுவத்தினர், சிசிடிவி கேமரா கண்காணிப்பு, மாவட்ட காவல்துறை பாதுகாப்பு ஆகியோர்கள் மூலம் செயல்படுத்தப்படும் சுழற்சி முறை பாதுகாப்பு குறித்தும் பார்வையிட்டு காவல்துறையினருடன் கலந்தாலோசித்தார். தொடர்ந்து அங்கு பராமரிக்கப்பட்டு வரும் பாதுகாப்பிற்கான குறிப்பேட்டு பதிவுகளை பார்வையிட்டு பதிவேட்டில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் ரத்தினசாமி, கையெழுத்திட்டார்.

வாக்கு எண்ணும் மையத்திற்கு 3 அடுக்கு பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி மத்திய பாதுகாப்பு படையினர் (CAPF) - 15, தமிழ்நாடு சிறப்பு காவல் படையினர் (TSP) -36, ஆயுதப்படை மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு (L&O) -192, ஊர்காவல் படையினர் - 4 என மொத்தம் 247 நபர்கள் சுழற்சி முறையில் பணியமர்த்தப்பட்டு வாக்கு எண்ணும் மைய பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேபோன்று வாக்கு எண்ணும் மையத்தில், Web Camera-க்கள் ஒவ்வொரு இருப்பு அறைக்கும், வாக்கு எண்ணும் மையத்தின் உட்புற பகுதிகளிலும், வெளிப்புறங்களிலும் பொருத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், தீயணைப்பு வாகனம், மின் விளக்குகள் (Focus lights), உரிய ஜெனரேட்டர் வசதிகள் மற்றும் வாக்கு எண்ணும் மையத்தின் நான்கு புறங்களிலும் உயர் கோபுரங்கள் ஏற்படுத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிப்பு பணிகள் சுழற்சி முறையில் 24 மணி நேரமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வேட்பாளர்களின் முகவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு சுழற்சி முறையில் வாக்கு எண்ணும் மையத்தில் கண்காணித்து கொள்ளவும் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வுகளில் மாவட்ட வருவாய் அலுவலர் மல்லிகா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சிவராமன், அரியலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் பிரேமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் மனோகரன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் முத்தமிழ்ச்செல்வன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) சித்ரா, வட்டாட்சியர்கள், வேட்பாளர்கள், வேட்பாளர்களின் முகவர்கள் மற்றும் இதர அரசு அலுவலர்கள், காவல் துறையினர் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

பெரம்பலூர் வாக்கு எண்ணும் மையத்தில்

கண்காணிப்பு கோபுரம் அமைத்து துப்பாக்கி ஏந்தி 3 அடுக்கு பாதுகாப்பு

சுழற்சி முறையில் 201 பேர் பணி

பெரம்பலூர், ஏப். 25: பெரம்பலூர்(தனி), குன்னம் சட்டமன்ற தொகுதிகளில் 85.39 சதவீத வாக்குகள் பதிவான அனைத்து மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களும் வாக்கு எண்ணும் மையத்தில் உள்ள பாதுகாப்பு அறைகளில் வைத்து பூட்டி சீல் வைக்கப்பட்டு, மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலில் பெரம்பலூர்(தனி) மற்றும் குன்னம் சட்டமன்றத் தொகுதிகளில் வாக்குப்பதிவு முடிந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், விவிபேட் மெஷின் ஆகியன வாக்கு எண்ணும் மையத்திற்கு விடிய விடிய கொண்டு வரப்பட்டது. அனைத்து வாக்கு பதிவு எந்திரங்களும் கொண்டு வரரப்பட்ட பின்னர் தேர்தல் அலுவலரான கலெக்டர் மிருணாளினி, பெரம்பலூர் (தனி) சட்டமன்ற தொகுதி தேர்தல் பொதுப் பார்வையாளர் நேகா பன்சால், மற்றும் குன்னம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொதுப் பார்வையாளர் அமர் பகதூர் சிங் மற்றும் சம்பந்தப்பட்ட தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்கள், வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் முன்னிலையில் நேற்று (2ம்தேதி) காலை பாதுகாப்பு அறைகளில் வைத்து பூட்டி சீல் வைக்கப்பட்டது.

தற்போது வாக்கு எண்ணும் மையமான ஆதவ் பப்ளிக் பள்ளி மூன்றடுக்கு பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. முதல் அடுக்கில் இந்தோ திபெத்தியன் எல்லை பாதுகாப்பு படை வீரர்கள் 24 பேரும், இரண்டாவது அடுக்கில், மாநில ஆயுத காவல் படையினர் 30 நபர்களும், மூன்றாவது அடுக்கில் சட்டம் ஒழுங்கு காவல் துறையினர் 147 நபர்களும் என 201 காவலர்கள் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். அதுமட்டுமல்லாது வாக்கு எண்ணும் மையம் முழுவதும் சி.சி.டி.வி கண்காணிப்பு கேமராக்கள் மூலம் 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த கண்காணிப்புக் கேமராக்களின் காட்சிகளை வேட்பாளர்களின் முகவர்கள் பார்ப்பதற்காக வாக்கு எண்ணும் மைய வளாகத்தில் தனி அறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சிகளின் போது பெரம்பலூர் மாவட்ட எஸ்பி மாவட்ட பிரபாகர், மாவட்ட உதவி தேர்தல் அலுவலரான மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் அனிதா (பெரம்பலூர்), சக்திவேல் (குன்னம்), மாவட்டக் கலெக்டரின் நேர்முக உதவியாளர் வேல்முருகன் (தேர்தல்), தேர்தல் தனி தாசில்தார் அருளானந்தம் அனைத்து உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களான தாசில்தார்கள், தேர்தல் துணை தாசில்தார்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

கீழப்புலியூர் திருப்பதி கோவிலில்

ஸ்ரீராமானுஜர் 1009வது ஜெயந்திவிழா

புதிய உற்சவர் திருமேனி பிரதிஷ்டை

கீழப்புலியூர் திருப்பதி கோயிலில் ராமானுஜர் திருமேனி பல்லக்கில் பிரகார உலா நடைபெற்றது.

குன்னம், ஏப். 25: குன்னம் அருகே உள்ள கீழப்புலியூரில் அமைந்துள்ள புலியூர் திருப்பதி கோவிலில் ஸ்ரீராமானுஜரின் 1009வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு ஸ்ரீராமானுஜரின் உற்சவர் திருமேனி பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதன் பின்னர் திருமஞ்சன உற்சவம், தாமரை மலர்மாலை அணிவித்து ஆரத்தி நடைபெற்றது. அப்போது ராமானுஜ நூற்றந்தாதி பாராயணம் செய்யப்பட்டது. பிறகு ராமானுஜரின் உற்சவ சிலை பல்லக்கில் வைக்கப்பட்டு மேளதாளம் முழங்க கோவில் பிரகார உலா நடைபெற்றது, இதில் ஸ்ரீரங்கம் அரங்கநாதர் திருக்கோவில் பிரதான பட்டாச்சாரியார் நரசிம்ம பட்டர், ராமானுஜரின் உற்சவர் திருமேனியை பிரதிஷ்டை செய்து வைத்தார். இதில் பெரம்பலூர், கீழப்புலியூர், சிறுகுடல், எழுமூர், முருக்கன்குடி உள்பட சுற்றுப்புற பகுதிகளைச்சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்துகொண்டு ராமானுஜர் மற்றும் ஸ்ரீதேவி, பூமாதேவி, பத்மாவதி கோதாதேவி சமேத வெங்கட வரதராஜ பெருமாளை தரிசித்தனர். விழா ஏற்பாடுகளை கோவில் பரம்பரை ஸ்தானிகம் கோபாலன் பட்டாச்சாரியார், ஜோதிடவியல் மற்றும் வாஸ்து நிபுணர் ஸ்ரீராமன் ஆதித்யா, ஸ்ரீகாந்த் பட்டாச்சாரியார் மற்றும் குழுவினர் செய்திருந்தனர்.

அரியலூரில் கிரிக்கெட் வீரர்கள் தேர்வு

தா.பழூர், ஏப். 25: அரியலூர் மாவட்ட கிரிக்கெட் சங்கம் சார்பில் 16 மற்றும் 19 வயதிற்கு உட்பட்ட வீரர்கள் தேர்தெடுக்கப்பட உள்ளனர். அதற்கான கிரிக்கெட் வீரர்கள் தேர்வு நடைபெற உள்ளது. வருகின்ற 1.5.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 7 மணி முதல் ஜெயங்கொண்டம் மாடர்ன் கல்லூரி வளாகத்தில் தேர்வு நடைபெறுகிறது. இத்தேர்வில் அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்கள் மட்டுமே பங்கு பெறலாம்.

16 வயதிற்கு உட்பட்ட அதற்கான வயது தகுதி 1.09.2010 தேதிக்கு பிறகு பிறந்திருக்க வேண்டும். 19 வயதுக்குட்பட்ட அதற்கான வீரர்கள் 1.09.2007 தேதிக்கு பிறகு பிறந்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு அரியலூர் மாவட்ட கிரிக்கெட் சங்க செயலாளர் குணாளன் கைபேசி எண் 95006 10349, 9976999557 என்ற கைபேசி எண்ணை தொடர்பு கொண்டு சந்தேகங்களை கேட்டுக்கொண்டு பயன் பெறலாம் என தெரிவித்துள்ளனர்.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலக அலகு: கிங்ஸ்டோன்பார்க் கமர்சியல் காம்ப்ளெக்ஸ், எண்.19/1, புதூர் நெடுஞ்சாலை, ராமலிங்க நகர், உறையூர், திருச்சி-620 017(தநா)

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 இன் கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது **க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின்** (இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 மற்றும் 9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் **அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 28.05.2026 தேதியன்று** மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
2	கடன் எண். LAP0597200000005018051 சேவியர் சத்தியநாத உடையார், (கடன்தாரர்) ஆரோக்கிய ஜீலையா பேபி சேவியர் (உப கடன்தாரர்)	07.11.2024 தேதியின்படி ரூ.9,37,836/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து முப்பத்தேழு ஆயிரத்து எண்ணூற்று முப்பத்தாறு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 17% வட்டி.	கையக	புதுக்கோட்டை பதிவு மாவட்டம், கந்தர்வகோட்டை சார் பதிவு அலுவலகம் மற்றும் வட்டம், தச்சன்குறிச்சி கிராமம், பட்டா எண்.1569, சர்வே எண். 252/2 இல் உள்ள 2175 ச.அடி பரப்பளவு உள்ள சொத்தின் **நான்கு எல்லைகள்:** கிழக்கில்: இன்னாசி முத்து சொத்து, மேற்கில்: நத்தம் சொத்து, தெற்கில்: நடுத்தெருவுக்குத் தெரு செல்லும் சாலை, வடக்கில்: செபஸ்டியானின் சொத்து, இந்த நான்கு எல்லைகளுக்குள் அளவீடு: கிழக்கு மேற்காக தெற்கில்: 35 அடி, வடக்கில்: 40 அடி, வடக்கு தெற்காக கிழக்கில்: 57 அடி, மேற்கில்:59 அடி. மொத்தம் 2175 ச.அடி அல்லது 202 ச.மீட்டர் பரப்பளவு உள்ள சொத்து. இதில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் அதனுடன் மின்சார சேவை இணைப்பு மற்றும் அதன் வைப்புத் தொகை, அனைத்து நடைபாதை, பயன்பாட்டு உரிமைகள் உள்ளடங்கிய சொத்து. இந்த சொத்து புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், தச்சன்குறிச்சி பஞ்சாயத்து எல்லைக்குள் உள்ளது.	Rs. 1320047.00/- (ரூபாய் பதின்மூன்று லட்சத்து இருபதாயிரத்து நாற்பத்தேழு மட்டும்)	Rs. 132004.70/- (ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்திரண்டாயிரத்து நான்கு மற்றும் பைசா எழுபது மட்டும்)	26-05-2026 Before 5 PM	10,000/-	19-05-2026 (11AM – 4PM)	28-05-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக கிரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்– **ஆக்சன் புரசீட்ஸ்** A/C என்ற வங்கிக் கணக்கில், ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பன்ச்சில் டெக் பார்க், நியூ கணபதி சௌக், 43/44, விமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 26.05.2026 அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை **முகவரி: கிங்ஸ்டோன்பார்க் கமர்சியல் காம்ப்ளெக்ஸ், எண்.19/1, புதூர் நெடுஞ்சாலை, ராமலிங்க நகர், உறையூர், திருச்சி–620 017(தநா), மேலும் செல்பேசி எண்.+91 8281138143, மின்னஞ்சல் முகவரி p.adith@grihumhousing.com தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.**

கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்–2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப – கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 30 நாள்கள் (முப்பது) அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்தித்தாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 25.04.2026, இடம்: தமிழ்நாடு **ஓம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்**